# 45-ஆம் ஆண்டில் கழக இளைஞர் அணி!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (20.7.2024) தலைமைச் செயலகத்தில், நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், எடுக்கப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா மற்றும் அரசு உயர் அலுவலர்களும், நீலகிரி மாவட்டத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ப.சுந்தரவடிவேல் மற்றும் அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜூலை 21- “தி.மு.க. இளைஞர் அணி” நேற்று, 45வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளதையொட்டி, சமூக வலைதளப் பதிவொன்று வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அப்பதிவில் “இளைஞர் அணிப் படையைச் சிறப்பாக வழி நடத்திச் செல்லும் தம்பி உதயநிதி ஸ்டாலினுக்குப் பாராட்டுகள்! வாழ்த்துகள்!” எனக் குறிப்பிட்டுள்ளார்.**

தி.மு.க. எனும் நமது மாபெரும் இயக்கத்தின் இதயமாம், இளைஞர் அணி தொடங்கப்பட்டு, 44 ஆண்டுகள் நிறைவடைந்து, 45ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

இளைஞர்களை ஒன்றிணைத்து இயக்கமாக்கி, தமிழர் உரிமை காக்கும் பேராயுதமாக தி.மு.க.வை உருவாக்கினார் பேரறிஞர் அண்ணா, அண்ணா காட்டிய வழியில் உடன்பிறப்புகளுக்கு கொள்கை உணர்வூட்டி தி.மு.க.வை வளர்த்தெடுத்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அண்ணா, கலைஞர் ஆகியோரின் நீட்சியாக, இயக்கத்திற்கான எதிர்காலம் குறித்த பெருங்கனவோடு, லட்சக்கணக்கான இளைஞர்களை அரசியல் மயப்படுத்திடும் பாசறையாக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் மதுரை ஜான்சி ராணி பூங்காவில் 1980 ஜூலை 20 அன்று தி.மு.க. இளைஞரணி தொடங்கப்பட்டது.

சென்னை கோபாலபுரத்தில் உள்ள ஒரு முடி திருத்தகத்தில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட்ட ‘கோபாலபுரம் இளைஞர் தி.மு.க’தான் 1980இல் மதுரை ஜான்சி ராணி பூங்காவில் “இளைஞர் அணி” என்னும் அதிகாரப்பூர்வ அணியாக மாறியது.

1982இல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், மாநில இளைஞர் அணிச் செயலாளராக நியமிக்கப்பட்ட மு.க.ஸ்டாலின் அவர்கள், தன்னுடைய இடைவிடா உழைப்பின் மூலம் இளைஞர் அணியை வலிமை வாய்ந்த ஆற்றல்மிக்க அணியாக உருவாக்கினார்.

தி.மு.க.வின் எழுச்சிக்கும் உணர்ச்சிக்கும் வெற்றிக்கும் மகிழ்ச்சிக்கும், தோன்றிய காலம் முதல் உறுதுணையாக இருந்து வருகிறது இளைஞரணி எனின் அது மிகையல்ல! தொடர்ந்து 30 ஆண்டுகள் இளைஞர் அணியின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து உழைத்த மு.க.ஸ்டாலின் அவர்கள், தி.மு.க.வின் செயல்தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு, மாநில இளைஞர் அணிச் செயலாளராக வெள்ளக்கோவில் சாமிநாதன் பொறுப்பேற்று, சீரிய முறையில் பணியாற்றினார்.

**உதயநிதி ஸ்டாலின் பொறுப்பேற்பு!**

2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து, கழகத்தினரின் வேண்டுகோளின்படியும் தலைமைக் கழகத்தின் முடிவின்படியும் 2019 ஜூலை 4 அன்று மாநில இளைஞர் அணிச் செயலாளராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெறுப்பேற்றார்.

இளைஞரணிச் செயலாளராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதும், 25 லட்சம் புதிய இளைஞர்களை கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்தார். இளைஞரணிச் செயலாளராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற போது, தி.மு.க. எதிர்க்கட்சி என்றபோதிலும் அரசியலுக்கு அப்பாற்பட்டு, கைவிடப்பட்ட நீர்நிலைகளைத் தூர்வாரும் பணியை மேற்கொண்டார்.

குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிரான போராட்டம் முதல், நீட் தேர்வை ஒழிக்க கையெழுத்து இயக்கம் வரையிலான போராட்டச் செயற்பாடுகளை உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. இளைஞரணி முன்னெடுத்தது.

2007இல் நெல்லையில் நடைபெற்ற இளைஞர் அணியின் முதல் மாநில மாநாட்டின் தொடர்ச்சியாக, 2024இல், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், சேலத்தில் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டை எழுச்சியுடன் நடத்திக் காட்டினார் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். உதயநிதி அவர்கள் பொறுப்பேற்ற பின் நடத்திய திராவிட மாடல் பாசறைக் கூட்டங்கள் திராவிட இயக்கத்தின் கொள்கையை ஊட்டும் வகுப்புகளாக அமைந்தன.

இளைஞர் அணி உறுப்பினர்களுக்கு தொகுதிதோறும் திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டம், வாசிப்பை விரிவுபடுத்த சட்டமன்றத் தொகுதிதோறும் ‘கலைஞர் நூலகம்’,’முரசொலி பாசறைப் பக்கம்’, ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’ என்று ஏராளமான பணிகளை முன்னெடுத்து வருகிறது தி.மு.க.வின் இதயமாம் இளைஞரணி!

இத்தகு பெருமைகளுக்கு உரிய தி.மு.க. இளைஞர் அணி தொடங்கப்பட்டு 44 ஆண்டுகள் நிறைவடைந்து, 45 ஆம் ஆண்டில் நேற்று அடியெடுத்து வைத்தது.

**அன்பகத்தில் கோலாகல விழா!**

இதையொட்டி, சென்னை - அன்பகத்தில் உள்ள அண்ணா மன்றத்தில், இளைஞரணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கோலாகல விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் இளைஞரணிக்கென மாவட்ட வாரியாக சமூக வலைத்தளப் பக்கத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். அதே போன்று, வருவாய் மாவட்ட வாரியாக இளைஞர் அணியின் சமூக வலை தளப் பக்கங்களையும், இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான சமூக வலை தளப் பயிற்சியையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இதுகுறித்து கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**45ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது, தி.மு.க. இளைஞர் அணி!**

**இளைஞரணிப் படையைச் சிறப்பாக வழிநடத்திச் செல்லும் தம்பி உதயநிதி ஸ்டாலினுக்குப் பாராட்டுகள்! வாழ்த்துகள்!**

**கழகக் கொள்கைகளையும் வரலாற்றையும் இன்றைய இளைஞர்களுக்கு ஏற்றாற்போல் எடுத்துச் சென்று, அவர்களை அரசியல் விழிப்புணர்வும் கொள்கைத் தெளிவும் பெற்றவர்களாக வார்த்தெடுப்பீர்கள் எனக் கழகத் தலைவராக நம்புகிறேன்.**

இவ்வாறு அப்பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

# தமிழ்நாட்டில் பருவகால கனமழை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – காணொலியில் மாவட்ட ஆட்சியர்களுடன் ஆலோசனை!

*சென்னை, ஜூலை 21 -*

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வரும் நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியர்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார்.




தமிழ்நாட்டில் நீலகிரி, தேனி, கோவை, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது.

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக மழை பெய்வதாகவும், அடுத்த சில நாட்களுக்கு மழை தொடரும் எனவும் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் அதி கனமழை காரணமாக பேரிடர் மீட்பு குழுவினரும் அங்கு தயார் நிலை யில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மாவட்ட ஆட்சியர்களுடன் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர் கள் காணொலி காட்சி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைச் செய லாளர் பேரிடர் மேலாண்மை துறை செயலாளர் உள்ளிட்ட அரசின் முக்கிய அதிகாரிகளும் பங்கேற்றனர்.

கனமழை பெய்து வரும் மாவட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், தடுப்பு நடவடிக்கைகள், தாழ்வான பகுதியில் வசிக்கக் கூடியவர்களை பாதுகாப்பான பகுதிகளுக்கு அப்புறப்படுத்துவது, அவர்களுக்குத் தேவையான உதவிகளை தயார் நிலையில் வைப்பது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தினார்.

## வங்கதேசத்தில் பதற்ற நிலை!

# தமிழர்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கிட நடவடிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜூலை 21 - வங்கதேசத்திலுள்ள தமிழர்களின் விவரங்களைப் பெற்று அவர்களுக்குத் தேவைப்படும் அனைத்து உதவிகளையும் விரைந்து வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

வங்கதேசத்தில் தற்போது நிலவும் பதற்றமான சூழ்நிலை காரணமாக தமிழர்கள் சிலர் தாயகம் திரும்ப இயலாமல் அங்கு சிக்கியிருப்பதாக தகவல்கள் வரப்பெறுள்ளன.

வங்கதேசத்தில் உள்ள இந்திய தூதரகம் அங்கு உள்ள இந்தியர்களின் பாதுகாப்பை கருதி, உள்ளூர் பயணங்களைத் தவிர்க்கவும், அவர்கள் வசிக்கும் வளாகத்திற்கு வெளியே தங்கள் நடமாட்டத்தைக் குறைக்கவும் அறிவுறுத்தியுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அயலகத் தமிழர் நலன் மற்றும்மறுவாழ்வுத்துறைஆணையரகத்தை, வங்கதேசத்தில் உள்ள தமிழர்களின் விவரங்களைப் பெற்று, அவர்களுக்குத் தேவைப்படும் அனைத்து உதவிகளையும் விரைந்து வழங்கிடுமாறு உத்தரவிட்டுள்ளார்.

**தமிழ்நாடு அரசு தயார் நிலையில் உள்ளது!**

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் அங்குள்ள இந்திய தூதரகம் மற்றும் தமிழ் அமைப்புகளை தொடர்பு கொண்டுள்ளது.

மேலும், அங்குள்ள நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, தமிழர்களுக்குத் தேவைப்படும் உதவிகளை செய்ய தமிழ்நாடு அரசு தயார் நிலையில் உள்ளது.

வங்கதேசத்தில் உள்ள தமிழர்களின் குடும்ப உறுப்பினர்கள், தங்களுக்கு உதவி தேவைப்படும் நிலையில், தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலத்துறையின் 24x7 கட்டணமில்லா உதவி எண்களை தொடர்புகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்தியாவிற்குள் +911800 309 3793

வெளிநாடு +9180 6900 9900

தொடர்புக்கு +9180 6900 9901

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று(20.07.2024) திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் எறும்பீஸ்வரர் திருக்கோயிலில் ரூ. 5.61கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள திருக்குளப் திருப்பணி, விநாயகர் சன்னதி முன் மண்டபம், செயல் அலுவலர் அலுவலகம், வாகன மண்டபம், அன்னதானக் கூடம், கழிப்பிடம் மற்றும் குளியலறை வசதிகள், வாகன நிறுத்துமிடம் ஆகிய திருப்பணிகள் குறித்து ஆய்வு செய்து, அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினர்.



நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை பெய்து வருவதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கூடலூர் ஊராட்சி ஒன்றியம், சேரங்கோடு ஊராட்சி, சேரம்பாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (20.07.2024) நேரில் சந்தித்து, நிவாரணப் பொருட்களை வழங்கினார். உடன் கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார் உட்பட பலர் உள்ளனர்.